3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

3. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் வகைமுறைகளின்கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளை மின்னணுமூலம் நிர்வகிக்கும் பொருட்டு, 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் (மையச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் இயற்றப்பெற்ற விதிகள் மற்றும் வழிமுறைகள் எந்த அளவிற்குப் பொருந்துமோ அந்த அளவிற்கு மேற்சொன்ன சட்டத்தின்படியான நடவடிக்கைகளுக்கு கடைப்பிடிப்பது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி1) துறையின் 29–1–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 16–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச்சட்டத்தின் வகைமுறைகளின்கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளை மின்னணுமூலம் நிர்வகிக்கும் பொருட்டு, 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் (மையச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் இயற்றப்பெற்ற விதிகள் மற்றும் வழிமுறைகள் எந்த அளவிற்குப் பொருந்துமோ அந்த அளவிற்கு மேற்சொன்ன சட்டத்தின்படியான நடவடிக்கைகளுக்கு கடைப்பிடிப்பது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி2) துறையின் 29–1–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 17–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 2014–2015 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

2016 ஜூன் 22]

6. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறு தொழில் கழகத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

3. 1957 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி (தமிழ்நாடு) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி1) துறையின் 16–2–2016 ஆம் நாளிட்ட 35 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

* * *

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS